# பிள்ளைகளைக் கண்காணித்தல் பெற்றோருக்கான வழிகாட்டி

பிள்ளைகளைக் கண்காணித்தல் பெற்றோருக்கான வழிகாட்டி

பிள்ளைகளைக் கண்காணிக்க யாரை நியமிப்பது என்பதைத் தீர்மானிப்பது பெற்றோர் எடுக்கும் தீர்மானங்களுள் முக்கியமானதொன்றாகும்.

(*The Child and Family Services Act*) சிறுவர் குடும்ப சேவையினரின் சட்டத்தின் படி 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை தனியே விடலாகாது. 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்வது சட்டப்படி பெற்றோரின் பொறுப்பாகும். பாலகர் சிறுவர் ஆகியோர் எப்பொழுதும் கண்காணிப்புக்குட்பட்டவராக இருக்க வேண்டும். 8 அல்லது 9 வயது பிள்ளைகளைக் கூட நீண்ட நேரத்துக்கு தனியாக விடலாகாது. பிள்ளைகள் தனியாக இருக்கும் வேளைகளில் அவசரகால நிலமையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அவர்களைத் தயார் படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவது மட்டுமன்றி தம் பிள்ளைகளின் முதிர்ச்சி பற்றியும் பொறுப்புணர்ச்சி பற்றியும் பிள்ளைகளை தனியே விடும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சிந்திக்க வேண்டும்.

10 வயதுக்கு பின்னரும் கூட 16 வயதுவரை பிள்ளைகளை கவனிக்க முறையான வழி வகுக்க வேண்டியது சட்டப்படி பெற்றோரின் பொறுப்பாகும். இந்த சட்டதிட்டங்கள் பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாப்பும் நல்வாழ்வும் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க உதவியாக உள்ளது. ஒரு பிள்ளையின் வயதை வைத்து அதன் முதிர்ச்சியையோ, பொறுப்புணர்ச்சியையோ கணிப்பிட முடியாது எள்பதை பெற்றோர் நினைவில் வைத்திருக்க வேண்டும். சில 10 வயது பிள்ளைகள் கொஞ்ச நேரத்திற்கு தம்மைத் தாம் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பர். சிலர் அதே வயதிலோ அல்லது அதைவிடச் சிறிது கூடிய வயதிலோ கூட தம்மை தாம் கவனிக்க முடியாதவர்களாக இருப்பர். எப்போது எவ்வளவு நேரத்துக்கு பிள்ளைகளை தனியாக விடலாம் என்பதை பெற்றோர் தீர்மானிக்க வேண்டும்.

பிள்ளை கண்காணிக்கப்பட வேண்டும் எனப் பெற்றோர் தீர்மானிக்கும் பட்சத்தில் யாரை அதற்கு நியமிக்கலாம் என்று முடிவு செய்வதைப் பெற்றோர் கவனத்திலெடுக்க வேண்டும். பொதுவாக பெற்றோர் வயது வந்த பிள்ளைகளை குழந்தைப் பராமரிப்பாளராக பயன் படுத்த நினைப்பார்கள். அப்படியான வேளைகளில் எப்படிப் பட்டவரை தெரிவு செய்ய வேண்டும் என்ற கேள்விகள் எழுவதுண்டு.

ஒவ்வொரு பிள்ளையும் வித்தியாசமான குணாதிசயமுடையவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். 10 வயதிலோ அல்லது அதற்கு கூடிய வயதிலோ எப்போது பிள்ளைகளை பாதுகாப்பாகத் தனியாக விடலாம் என்பதை சட்டம் திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாதோ அதே போன்று 10 வயதுக்கு மேல் எந்த வயதில் மற்றப் பிள்ளைகளை கவனிக்கத் தொடங்கலாம் என்பதும் சட்டத்தில் இல்லை. நீங்கள் வீட்டில் இல்லாத போது உங்கள் பிள்ளையின் குறிப்பிடப்படும் தேவைகளை கவனிக்கும் ஒருவரை நியமிப்பது பெற்றோரின் பொறுப்பாகும்.

வயதுகூடிய பிள்ளை ஒன்று எப்போது சிறு பிள்ளைகளைக் கவனிக்க முடியும் என்பதை பெற்றோராகிய நீங்கள் கணிப்பிடக் கூடியதாக இருக்க வேண்டும். உங்கள் பிள்ளையை நீங்கள் தினமும் கவனிப்பவராகையால் அவர்களைக் சிறப்பாகக் கவனிக்க கூடிய ஒருவரைத் தீர்மானிப்பதற்கு நீங்கள் தான் உகந்தவர்.

பிள்ளைகளை கவனிப்பவரை தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய பல விடயங்கள் உண்டு. அவருடைய முதிர்ச்சி, திறமை, நம்பகமானதன்மை, கடந்தகால சரித்திரம், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறமை என்பவற்றைக் கருத்திலெடுக்க வேண்டும்.

## உங்களிடம் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள்

- உங்கள் பிள்ளையை கவனிக்க நீங்கள் தேர்ந்த வயதுகூடிய பிள்ளை நியாயமாக நடக்கக் கூடியவரா, மற்றும் பிரச்சினைகளை சுயமாகத் தீர்க்கும் அனுபவம் உண்டா? தீ விபத்து, வெள்ளம், விபத்து, சிறுபிள்ளை காயப்படுதல் போன்ற வேளைகளில் என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குத் தெரியுமா?

- அவருக்கு நடத்தைப்பிரச்சினை, மனவேதனைகள், அல்லது போதை மருந்து, அல்லது மது அருந்தும் பழக்கம் உள்ளவராக இருந்து அதனால் தனக்களிக்கப்பட்டுள்ள பொறுப்பை செய்ய முடியாமற் போகக் கூடியவரா?

- உங்கள் பிள்ளையை கவனிப்பவர் தன் கடமையை சரியாக செய்ய முடியாதவாறு உங்கள் பிள்ளைக்கு ஏதம் நடத்தைப்பிரச்சினை, மனவேதனைகள் உள்ளதா? தன்னை கவனிப்பவருடன் தனியாக விடப்படுவது பற்றி உங்கள் பிள்ளையின் உணர்வு என்ன? பிள்ளை கலக்கமடையும் அல்லது பயப்படும் தன்மை தென்படுகின்றதா?

- எவ்வளவு நேரத்துக்கு பிள்ளையை கவனிப்பவரின் உதவி தேவைப்படும்? நேர எல்லை நீடிக்கும் பட்சத்தில் பராமரிப்பாளர் கூடுதலான கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறாயின் அவர் முதிர்ச்சியும் அறிவாற்றலும் உள்ளவராக இருக்க வேண்டும்.

- கவனிக்கப் பட வேண்டிய பிள்ளையின் வயதென்ன? 12 வயதுப்பிள்ளை ஒன்றினால் கைக்குழந்தைகளையோ சிறு பிள்ளைகளையோ கவனிப்பது சாத்தியமற்றது, ஆனால் 7-அல்லது 8-வயதுப்பிள்ளை ஒன்றை பாடசாலை முடிந்த பின் கவனிப்பது 12 வயதுப்பிள்ளையினால் சாத்தியமாகும்.

## உங்கள் பொறுப்பு

- பிள்ளையை கவனிப்பவரிடம் அவசரகால நிலமை தொலைபேசி இலக்கங்களை கொடுத்தும் எப்படி செயற்படுவது என்று கூறுவதையும் நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைக்கு ஏதம் ஒவ்வாமை (allergy) இருப்பின் அது குறித்தும் மருத்துவ மற்றும் உடல் நிலமை பற்றியும் அவரிடம் எச்சரித்து வைக்கவும்.

- உங்கள் சிறு பிள்ளையை வீட்டில் இன்னொரு வயது கூடிய பிள்ளை கவனிக்கும் போது அவர் உங்களைத் தொடர்பு கொள்ள தெளிவானதும் நம்பிக்கை உள்ளதுமான ஒரு வழி இருக்க வேண்டும். அவசரகால நிலமையில் நீங்கள் அல்லது பொறுப்பான இன்னொரு வயது வந்தவர் உதவக் கூடியதாக ஒழுங்கு செய்ய வேண்டும்.

- உங்கள் பிள்ளைகளுக்கும் வீட்டுக்காரியங்களுக்கும் நீங்கள் கையாளும் சட்டங்கள் பற்றி பிள்ளையை கவனிப்பவரிடம் கூற வேண்டும். உதாரணமாக, பிள்ளையை கவனிப்பவரிடமோ அல்லது உங்கள் பிள்ளைகளிடமோ சிநேகிதர் வரலாமா, நீங்கள் இல்லாத போது வரும் தொலைபேசி அழைப்புகள் அல்லது வீட்டுக்கு யாராவது வந்தால் என்ன செய்வது என்பன பற்றி கூற வேண்டும்?

- (St. John's Ambulance) சென். ஜோன்ஸ் அல்லது (Red Cross) றெட்குறஸ் வழங்கும் பிள்ளைகளை கவனிப்பதற்கான பயிற்சி பெற்ற ஒருவரை குழந்தைப் பராமரிப்பாளராக தெரிவு செய்ய வேண்டும். இப் பயிற்சியை 11 வயதுடைய பிள்ளைகளும் பெறலாம்.

- கல்விச்சபையின் எழுத்துமூல அனுமதி இன்றி 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை பாடசாலைக்குரிய நேரத்தில் சிறு பிள்ளைகளை கவனிப்பதற்கென வாடகைக்கு அமர்த்த முடியாது.